நகல்:-

### தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

நிர்வாகம் - நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் - சீருடைகள் - துப்புரவுப் பணியாளர்களுக்கு கைத்தறி ஆடைகள் வழங்கல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை

அரசு ஆணை (நிலை) எண். 489 நாள்: 3.8.89

ஆணை:-

நகராட்சிகள் மற்றும் நகராட்சி நகரியங்களில் பணிபுரியும் துப்புரவுப் பெண் பணியாளர்களுக்கு சீருடைகளாக மூன்று புடவைகளும், ஆண் துப்புரவு பணியாளர்களுக்கு சீருடைகளாக மூன்று உடைகளும் கதர் உடைகளாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு இனி சீருடைகள் கைத்தறியில் வழங்கலாமா எனும் செயற்குறிப்பு அரசால் ஆராயப்பட்டது. இனிவரும் காலங்களில் துப்புரவுப் பணியாளர்களின் சீருடைகள் கைத்தறியிலேயே வழங்கலாம் எனவும், இதனால் ஏற்படும் செலவை நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் அவற்றின் நிதியிலிருந்தே ஏற்க வேண்டும் எனவும், அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி. தங்கராசு,
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும்
நகரியசெயல் அலுவலர்கள்

//உண்மை நகல்//

ஆணையாளர்,
உடுமலைப்பேட்டை நகராட்சி.